STATE OF WASHINGTON
DEPARTMENT OF CHILDREN, YOUTH, AND FAMILIES
1500 Jefferson Street, SE ● P.O. Box 40975 ● Olympia WA 98504-0975

ஜூன் 8, 2020
பெற்றோர்களுக்கான கடிதம்

முதலில், இந்தக் கடிதத்தை வாசிக்கையில் நீங்களும் உங்கள் குடும்பமும் பாதுகாப்பாகவும் மற்றும் ஆரோக்கியமாகவும் இருக்கிறீர்கள் என்று நம்புகிறோம். நாங்களும் உங்களைப் போலவே கடந்த சில மாதங்களாக வாழ்க்கையில் ஏற்படும் மிகப்பெரிய மாற்றங்களுக்கு அனுசரித்து வருவதால், உங்கள் பொறுமைக்கும் மற்றும் புரிதலுக்கும் நன்றி தெரிவிக்கிறோம். இத்தகைய கடினமான நேரங்களில் குடும்பங்களின் நம்பிக்கை, நெகிழ்வுத்தன்மை மற்றும் பின்னடைவைப் பாராட்டுகிறோம். உங்களில் சிலர் மெய்நிகர் சேவைகளுக்கு மாறியதைப் பாராட்டினீர்கள், மற்றவர்களுக்கு நேரடி சேவைகளை இடைநிறுத்தியது சிரமமாக இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்கிறோம்.

காலப்போக்கில் வாஷிங்டன் மாநிலத்தில் COVID-19 தாக்கம் மற்றும் சேவைகளைப் பெறும் குழந்தைகள் மற்றும் குடும்பங்களின் ஆரோக்கியம் மற்றும் நலனுக்கான கவலைகளின் அடிப்படையில், Early Support for Infants and Toddlers (ESIT) மாநில அலுவலகம் நேரில் சேவை வழங்குவதை வரம்பிற்குட்பட்ட விதிவிலக்குகளுடன் தொடர்ந்து இடைநிறுத்த முடிவெடுத்துள்ளது.

மெய்நிகர் சேவைகளுக்கு மாறிய உங்களில் பலர் நெகிழ்வுத்தன்மை, சேவைகளுக்கான எளிய அணுகல் மற்றும் வழங்குநர்களிடம் இருந்து மேம்படுத்தப்பட்ட பயிற்சி ஆகியவற்றை மகிழ்கிறீர்கள் என்று கேள்விப்பட்டோம். மெய்நிகர் சேவைகளின் செயல்திறனை ஆதரிக்கும் ஆராய்ச்சி பல உள்ளன மற்றும் இந்தச் சேவை வழங்கும் அணுகுமுறை தொடர்ந்து ஒரு விருப்பமாக இருக்கும்.

நீங்கள் நேரில் வழங்கப்படும் வரை சேவைகளைப் பெறுவதற்காகக் காத்திருக்க முடிவு செய்துள்ள பெற்றோர் எனில், நீங்கள் மெய்நிகர் சேவைகளை ஒருமுறை முயற்சிக்குமாறு நான் ஊக்குவிக்கிறேன். *உங்கள் பிள்ளையின் வாழ்க்கையில் இந்த விரைவான வளர்ச்சி மாற்றக் காலத்தின் போது முக்கியமான காலம் இழக்கப்படாமல் இருப்பதை நாங்கள் உறுதிபடுத்த விரும்புகிறோம்.* அனைத்துத் தேவைகளும் மெய்நிகர் சேவைகள் மூலம் நிறைவேற்றப்பட முடியாது என்பதை அறிவோம். *அனைத்து* குழந்தைகள் மற்றும் குடும்பங்களின் தனிப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகக் கால வரம்பிற்குட்பட்ட நேரில் வழங்கும் சேவைகள் தேவைப்படும் குழந்தைகளுக்காக நேரில் வழங்கும் சேவைகள் அதிகமாகப் பரவுவது திரும்பும் முன் விதிவிலக்குகளைக் கண்டறிய நாங்கள் அமைப்புகளை உருவாக்கி வருகிறோம். குழந்தைகள், பெற்றோர்கள் மற்றும் சேவைகளை வழங்கும் ஊழியருக்கான பாதுகாப்பை உறுதிபடுத்துகையில் சேவைகளை எங்கு எவ்வாறு வழங்கப்படும் என்பதை நாங்கள் முடிவெடுப்போம். உங்கள் குழந்தைக்கு இந்த வரம்பிற்குட்பட்ட நேரில் வழங்கும் சேவைகள் தேவைப்படுவதாக நீங்கள் நம்பினால், கிடைக்கக்கூடிய காலவரிசைகள் மற்றும் விருப்பங்களை விவாதிக்க உங்கள் சேவை வழங்குநரைத் தொடர்பு கொள்ளவும்.

நேரில் வழங்கும் சேவைகளுக்குப் பாதுகாப்பாகத் திரும்பும் திட்டமிடலை ஆதரிக்க, சேவை வழங்குநர்கள் மற்றும் குடும்பங்கள் அடங்கிய சிறிய பணிக் குழு, Governor Inslee's Safe Start உடன் இணங்கக்கூடிய திட்டத்தை ESIT-க்காக உருவாக்கச் சந்திக்கிறார்கள்.

இந்தக் பணிக் குழுவிற்கான இலக்குகளாவன:

1. நேரில் ஆதரவைப் பெற அவசர, சிறு கால தேவையுடைய குழந்தைகள் மற்றும் கைக்குழந்தைகளை அனுமதிக்க பயன்படுத்த வேண்டிய விதிவிலக்குகளுக்கான பரிந்துரைகளை வளர்த்தல்.
2. Governor Inslee’s Safe Start Plan உடன் இணங்கி பயன்படுத்த வேண்டிய பிராந்திய அணுகுமுறையைப் பயன்படுத்தி நேரில் சேவைகளை வழங்குவதற்குத் திரும்ப திட்டத்தை உருவாக்குதல்.

மாநில முழுவதிலும் இருந்து மற்றும் மிக முக்கியமாக குடும்பங்களில் இருந்து ESIT சேவை வழங்குநர்களின் கருத்துக்கள் நம் திட்டத்தில் அடங்கும்.

இந்த மிகக் கடினமான காலத்தின் போது ESIT சேவைகளைப் பெறும் குடும்பங்களின் அனுபவத்தையும் சவால்களையும் புரிந்துகொள்வதற்கு எங்களுக்கு உதவும் குடும்ப கருத்தாய்வை நாங்கள் மிக விரைவில் வழங்குவோம்.

பணிக் குழுவுடன் பகிர உங்களுக்கு கேள்விகள், கவலைகள் அல்லது யோசனைகள் இருந்தால், laurie.thomas@dcyf.wa.gov இல் என்னைத் தொடர்பு கொள்ளவும்.

இதில் நான் ஒன்றாக இணைந்து வேலை செய்கையில், உங்கள் பொறுமைக்கு நாங்கள் நன்றியுடைவர்களாக இருக்கிறோம்.

உண்மையுள்ள,

Laurie Thomas
Administrator
Early Support for Infants and Toddlers Program